DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.5/2025**
**P.W.8**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.இராதாகிருஷ்ணன் |
| Father's Name | : | திரு.ராஜு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 58 |

(Accused 1 to 4 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of June 2026.

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டும் என்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க குற்றவியல் பல்வகை மனு எண்.2361/2026 ல் 23.06.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் திருவாரூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு இந்நீதிமன்ற கடித எண்.819/2026 நாள்.23.06.2026ன்படி திரு.R.இராதாகிருஷ்ணன், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

திருவாரூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் திரு.சதிஸ்குமார், Assistant Programmer, முதன்மை மாவட்ட நீதிமன்றம் என்பவர் Remote point coordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024–ம் வருடம் திருச்சி மாவட்டம், மணப்பாறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது கடந்த 26.10.2024–ம் தேதி துவரங்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ரெங்கசாமி என்பவர் துவரங்குறிச்சி அரசு மருத்தவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த

Web Copy

பிரபு மனைவி மோகனசுந்தரி கொடுத்த புகாரைப் பெற்று காவல் நிலையக் குற்ற எண்.237/2024, பிரிவுகள் 296(பி), 115(2), 351(3) BNS மற்றும் 3(1)(r),3(1)(s), 3(2)(va) SC/ST Act ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

புலன்விசாரணை அதிகாரியை நியமிக்கவேண்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலுடன் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார்.

மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.50/SJ&HR/PROCEEDINGS/TRI/2024, நாள் 26.10.2024-ன் படி எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.6** ஆகும்.

நான் இந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 26.10.2024 அன்று மதியம் 01.30 மணிக்கு சம்பவ இடம் சென்ற சாட்சிகள் செல்வராஜ் மற்றும் ராசு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தை குறிக்கக் கூடிய பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.7** ஆகும். அன்றே சாட்சிகள் மோகனசுந்தரி, சின்னதங்கம், பொன்னடைக்கன், செல்வராஜ், ராசு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். கடந்த 05.12.2024 அன்று சாட்சி பிரபுவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று கேட்டு சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். சாதி சான்று மெய்த்தன்மை சான்று வழங்கிய வருவாய் வட்டாட்சியர் சரவணபிரபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட மோகனசுந்தரிக்கு சிகிச்சை அளித்த துவரங்குறிச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.நசீரின் என்பவரை

விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று 30.12.2024 அன்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றே மருத்துவமனை சென்று புகார்தாரரிடம் வாக்குமூலம் பதிவு செய்த உதவி ஆய்வாளர் ரெங்கசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணை குறித்து அன்றே எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நாள் 23.10.2024 மதியம் 03.00 மணி என்றால் சரிதான். அ.சா.1 மோகனசுந்தரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாள் 23.10.2024 இரவு 07.00 மணி என்றால் சரிதான். அன்றே உதவி ஆய்வாளர் ரெங்கசாமி மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறார் என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் என்ற இடத்தில் 26.10.2024 அன்று 12.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது தொடர்பாக நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ரெங்கசாமியை விசாரிக்கவில்லை என்றால் அது தொடர்பாக உதவி ஆய்வாளர் என்னிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. நான் உதவி ஆய்வாளரை இது தொடர்பாக விசாரிக்கவில்லை என்றும், அதனால் தான் அவர் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை பதிவு செய்த இதே உதவி ஆய்வாளர் இதே வழக்கு சம்பவத்தில் 3–வது எதிரியை அ.சா.1 மோகனசுந்தரி தாக்கியதாக குற்ற எண்.236/2024 என ஒரு வழக்கை பதிவு செய்திருக்கிறார் என்றால் அது பற்றி என்னிடம் தெரிவிக்கவில்லை. அ.சா.1 மோகனசுந்தரி கொடுத்த புகாரில் 24.10.2024 அன்று மனு எண்.496/2024–ல் மனுவின் சாராம்சம் என்ற இடத்தில் மனுதாரரின் குடும்பத்திற்கும், எதிர் மனுதாரரின் குடும்பத்திற்கும் இட பிரச்சனை இருந்து வருவதாகவும், அதன் காரணமாக மனுதாரரை எதிர்மனுதாரர்கள் திட்டி, அடித்ததாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 மோகனசுந்தரி

Verdictum

மருத்துவமனையில் சிகிச்சை செல்வதற்கு 2 மணி நேரத்திற்கு முன்பாகவே 3–வது எதிரி சிகிச்சைக்கு சென்றிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு 26.10.2024 அன்று மதியம் 01.30 மணிக்கு சென்றேன். பார்வை மகஜர் சாட்சிகள் இருவரும் அ.சா.1 மோகனசுந்தரியின் கணவரின் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ இடம் தரிசு நிலம் என மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். சம்பவ இடமான தரிசு நிலத்தின் உரிமையாளர் பற்றி குறிப்பிடப்படவில்லை. எனக்கு சம்பவ இடத்தை யார் அடையாளம் காண்பித்தார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் தகவலாளியின் தகவலின் பேரில் நான் அங்கு சென்றேன். மருத்துவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவரிடம் அ.சா.1 மோகனசுந்தரி தன் வீட்டில் நடந்ததாக சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். அ.சா.1 மோகனசுந்தரி குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் ஏற்கனவே உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 மோகனசுந்தரி, அ.சா.2, அ.சா.3, அ.சா.5 ஆகியோர்களுக்கு எதிராக சிவில் வழக்கு நடைபெறுவதால் எதிரிகள் குடும்பத்தை மிரட்டி பணிய வைக்கவும், அந்த வழக்கை வாபஸ் பெற வைக்கவும், 3–வது எதிரியை தாக்கியதால் அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காகவும், இந்த வழக்கை பொய்யாக ஜோடித்து தாக்கல் செய்து இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. முந்தைய குற்ற எண்.236/2024 வழக்கை சரிவர புலன் விசாரணை மேற்கொண்டு இருந்தால் இந்த வழக்கு பதிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், அனைத்து ஆவணங்களும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.),XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe Copy